அன்னைக்கு உபகாரம் செய்வதுண்டோ
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ
கண்ணுக்கு இமை இன்றிக் காவல் உண்டோ
கன்றுக்குப் பசுவன்றிச் சொந்தம் உண்டோ
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ
முழுமைக்கும் நீ எம்தன் அன்னையன்றோ
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதம் உண்டோ
என்றைக்கும் நாம் உன்றன் பிள்ளையன்றோ (கற்பூர)

அன்புக்கே நாம் அடிமை ஆக வேண்டும்
அறிவுக்கே எம் காது கேட்க வேண்டும்
வம்புக்கே போகமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை எம் நெச்சம் அறுக்க வேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசை வேண்டும்
பரிவுக்கே நாம் என்றும் பணிய வேண்டும்
எம்பக்கம் இவை எல்லாம் இருக்க வேண்டும்
எம்மோடு நீ என்றும் வாழ வேண்டும் (கற்பூர)

கும்பிடவோ கை இரண்டும் போதவில்லை
கூப்பிடவோ நா ஒன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய் அதனில் சக்தி இல்லை
நடந்திடவோ கால் இரண்டால் ஆகவில்லை
செம்பவள வாய் ஆழகி உன் எழிலோ
சின்ன இரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவும் இல்லை (கற்பூர)

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகி பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் எம்மை. (கற்பூர)